# அலகு 5

## சமயத்தின் தோற்றம்

சமயத்தின் தோற்றம்பற்றிப் பல்வேறு கோட்பாடுகளும் கருதுகோள்களும் முன்வைக்கப்பட்டன. அவையெல்லாம் ஊகங்களே. சமயத்தின் தோற்றத்தை ஒருபோதும் கண்டுபிடிக்க இயலாது.

### சில கருத்தாக்கங்கள்

#### ஆவியியம் (Animism)

இன்றைய ஆய்வில் ஆவியியம் சிறப்பிடம் பெறவில்லை. மூன்று காரணங்களுக்காகவே இன்று அது ஒதுக்கித்தள்ளப்படாமல் உள்ளது. முதலாவதாக டைலரின் கோட்பாடு நூறு ஆண்டுகளாக ஆராய்ச்சியில் ஒரு தாக்கத்தைச் செய்துள்ளது. இன்றும்கூட அதோர் அதிகாரபூர்வமான கோட்பாடுபோலச் சில வட்டாரங்களில் கருதப் படுகிறது. இரண்டாவதாகச் சமயத்தைப்பற்றிய அறிவுபூர்வமான வரலாறு முழுவதிலும் தாக்கம் செலுத்திய கோட்பாட்டுக்கு அளிக்கப் பட்ட இருபதாம் நூற்றாண்டுப் பெயர்போல ஆவியியம் (Animism) காணப்படுகிறது. மூன்றாவதாக 'ஆவியியம்' தோற்றம்பற்றிய 19ஆம் நூற்றாண்டு ஆய்வுகளுடன் தொடர்புடையது. தோற்றம் பற்றிய படி மலர்ச்சி ஆய்வுகளெல்லாம் ஊகங்களேயொழிய உண்மைகளல்ல.

#### உயிரியம் (Animatism)

'அனிமாட்டிசம்' என்ற சொல்லுக்கீடாகத் தமிழில் 'உயிரியம்' என்ற சொல்லைப் 'பண்பாட்டு மானிடவியல்' என்ற நூலில் சீ. பக்தவத்சல பாரதி வழங்குகிறார்.

## போன்மையியம் அல்லது போலிப் பொருள் வழிபாடு (Fetishism)

போலிப்பொருள் வழிபாடு என்பதைச் சுட்டவே போலியம் என்ற சொல் இங்கு பயன்படுத்தப் படுகிறது. போர்ச்சுக்கீசியச் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது 'ஃபெட்டிசிசம்' என்ற சொல்.

போர்த்துக்கீசியர் ஆப்பிரிக்க மேற்குக்கடற்கரைக்கு வந்து, பண்ட்டு மொழி பேசும் மக்களின் மந்திரச் சமயச் சடங்குகள்பற்றி அறிந்தனர். சிறப்பாக சயர் (zaire) அல்லது காங்கோ மக்களின் சடங்குகளை ஆய்ந்தனர். இந்த இனக்குழுக்களுள் பெரும்பாலோர் போலிப் பொருள்கள் என்ற வகைக்குள் அடங்கக்கூடிய உருவாக்கப் பட்ட பல பொருள்களையும், இயற்கைப் பொருள்களையும் பயன் படுத்துகின்றனர். குறிகூறும் நிமித்திகர்களின் கூடைக்குள் இருக்கும் உருவங்கள் பல்வேறு பொருள்களிலிருந்து செதுக்கப்பட்டவை. இவற்றுள் சில உருவங்கள் களிமண் அல்லது கரையான் புற்று மண்ணால் செய்யப்பட்டவை; சில காய்ந்த மரங்கள் அல்லது மரத்தின் வேர்கள், கிளைகள், இலைகள், குச்சிகள், கிளைகள், பழங்கள் போன்ற வற்றிலிருந்தும், கரடுமுரடாகச் செதுக்கப்பட்டவை. மரத்தின் அடிப் பகுதிகளும், வலையால் மூடப்பட்ட சிறிய பொம்மைகளும், சிறிய இசைக்கருவிகளும், மிகச் சிறிய விவசாய, வேட்டைக் கருவிகளும், மரம் எலும்பு, தந்தம் ஆகியவற்றால் செதுக்கப்பட்ட மானுட உயிரிகளும், விலங்குகளும்; கொம்புகள், நகங்கள், மனித, விலங்குத் தோல்களும், ஆமை ஓடுகளும், அக்கூடைக்குள்ளிருக்கும்; புனிதப் பாறைகள், கனிமங்கள், சிலுவைகள், படிமங்கள் போன்றவை கிறித்தவ வழிபாடுகளில் பயன்படுத்தப்படும். வசிய மருந்துகள் அல்லது மந்திரப்பொருள்கள், மருந்துகள் போன்றவையும் இப்போலிப் பொருள்களுள் அடங்கும்.

தமிழ்நாட்டில் செம்பு அல்லது இரும்பினால் செய்யப்பட்ட தாயத்துகளைக் கட்டிக்கொள்வதும், மந்திரித்துக் கட்டிக் கொள்ளப் படும் பிற பொருள்களும், நரிப் பற்களை அணிவதும் போலிப் பொருள் வழிபாட்டின் தொடர்ச்சியே

## குலக்குறியியம் (Totemism)

குலக்குறியியம் என்பது ஒரு மந்திரச் சமய நம்பிக்கை ஒழுங்கமைப்பு முறையாகும். இது இனக்குழுச் சமுதாயத்தின் ஓரியல்பாகக் கருதப்படும். இதன்படி ஒரு குலக்குறியுடன் மனிதன் உறவுமுறையுடையவன் என்று நம்பப்படுகிறான்;

பல்வேறு சூழல்களில், பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு வகைகளிலும் குலக்குறியம் வெளிப்படும்.

குலக்குறியங்கள் என்றழைக்கப்படும் விலங்குகள் அல்லது இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றுடன் சமூகக் குழுக்களுக்கு அல்லது குறிப்பிட்ட ஆட்களுக்குப் பல வழிமுறைகளில் உறவுகள் உள்ளன அல்லது குறிப்பிட்ட ஆட்களுக்குக் கருத்துருவ, மறை மெய்மையான (mystical), உணர்வுபூர்வ, வணக்கத்துக்குரிய, கால்வழி சார்ந்த (genealogical) உறவுமுறைகள் உள்ளன.

## நாட்டார் வழிபாடு

தமிழ்நாட்டார் சமயம் அல்லது நாட்டார் வழிபாடு என்ற தலைப்பில் ஆய்வுசெய்வது எளிதன்று. தமிழகமெங்கும் வாழும் மக்கள் ஒரு படித்தான ஒரே பண்பாட்டைச் சார்ந்தோரல்லர். ஒரு மொழி பேசினாலும் ஒரே தன்மையினர் அல்லர். சாதியாலும், பல்வேறு உட்குழுக் களாலும் வேறுபட்டோர். ஒரு குழுவைச் சார்ந்தோர் ஒரேயொரு தெய்வத்தை மட்டும் வழிபடுவோருமல்லர். ஒரு தெய்வம் தமிழக மெங்கும் ஒரேமாதிரியாக வழிபடப்படுவதுமில்லை. சில தெய்வங்கள் சில இடங்களில் சிறப்பாக வழிபடப்படும்.

வழிபாடு செய்யும் ஒவ்வொரு குழுவும் வெவ்வேறுபட்ட தனித்தனி நடத்தைகளையும், நம்பிக்கைகளையும், பூசாரிகளையும் கொண்டிருக்கும். இயற்கையிறந்த சக்தியின்மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டு புனிதமான நடத்தைகளில் மக்கள் குழுவினர் ஈடுபடும்போதுதான் வழிபாடு தோன்றும். ஒவ்வொரு சமயமும் அல்லது ஒவ்வொரு வழிபாடும் பின்வரும் பண்புகளுள் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் கொண்டமையும்.

உலகில் வழிபாட்டுச் சடங்குகளில் பல்வேறு பொருள்கள் நாட்டாரால் குறியீடுகளாக்கப்பட்டுள்ளன. "நிலவு, சூரியன், விண்மீன்கள், ஐம்பெரும் பூதங்கள், ஆறு, கடல், மலை, விலங்கு, மரம், செடி, கொடி, கருவிகள், கல், ஆண் பெண் குறிகள், பாம்பு, தவளை போன்ற பல பொருள்களும் வழிபடுபொருள்களாக இருந்துள்ளன. உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் உலகின் ஏதாவதொரு பகுதியில், யாரோ ஒரு பகுதி மக்களால், ஏதோ ஒரு கால கட்டத்தில் ஏதோ ஒரு காரணத்தால் வழிபடப்பட்டிருக்கும்" என்கிறார் மிர்சியா இலியாடே

சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற தொடர்கள் இன்று தமிழ் ஆய்வுலகில் பெரிதும் வழக்கிலுள்ளன. இவை தவறான வழக்குகள் (misnomers). சிறுதெய்வம் என்ற வழக்கு 'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' என்று ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில் காணப்படுகிறது. இதற்கு மாறாகப் 'பெருந்தெய்வம்' என்பது புறநானூற்றில் (58), 'இரு பெருந்தெய்வமும் உடனின்றா அங்கு' என்று பலராமனையும் திருமாலையும் இருபெருவேந்தருடன் ஒப்பிட்டுப் பேசுகிறார் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். எனவே சமூகத்தின் அடித்தளத்து மக்கள் (subaltern) வழிபடும் கடவுளரைச் சிறுதெய்வங்கள் எனவும் மேல்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களைப் பெருந்தெய்வம் எனவும் குறிப்பிடும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்திருப்பதாகத் தெரிகிறது

பெருந்தெய்வக் கோயில்கள் என்றழைக்கப்படும் கோயில்கள் ஆகம சிற்பக்கலைகளின் அடிப்படையில் கட்டப்பட்டவை. ஆதிக்க சக்திகளின் பொருளுதவி பெற்றவை. பிராமணப் பூசாரிகளைக் கொண்டவை; உயிர்ப்பலிகள் இடம்பெறுவதில்லை; தெய்வம் மனிதர்மீது இறங்கி வருவதில்லை; கல்லில்தான் தெய்வம் வந்து உறையும். ஆறுகாலப் பூசையும் சோடச உபச்சாரங்களும் பெறுபவை.

சிறுதெய்வங்கள் பலவற்றிற்குப் பல்வேறு ஊர்களிலும் பல்வேறு வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டமைக்கு மூன்று காரணங்களைக் கூறலாம். முதலாவதாக ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்குக் குடி பெயர்ந்து செல்பவர்கள் தாம் வழிபட்டுவந்த தெய்வத்தைத் தாம் வாழப்போகும் இடத்திற்குக் கொண்டுசெல்கின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்துவந்துள்ளது. அவ்வாறு செல்லும்போது தாம் வாழ்ந்த இடத்திலுள்ள தெய்வம் உறைந்த பீடத்திலிருந்து பிடிமண் எடுத்துச் சென்று ஊரின் ஓரிடத்தில் அப்பிடிமண்ணைப் போட்டு அத்தெய்வத்திற்குப் பீடமமைப்பது மரபு. இவ்வாறு உருவாக்கப்பட்ட தெய்வத்தைப் 'போட்டுக் கொடுத்த சாமி' என்று நெல்லை, குமரி மாவட்டங்களில் அழைப்பர். மாடன்களில் சுடலைமாடனுக்குப் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் பீடங்கள் காணப்படுவதற்கு இதுவே காரணமாம். மேலும், முன்னர் குறிப்பிட்டதுபோல எல்லாச் சாதியினரும் (பிராமணர்களைத் தவிர) இத்தெய்வத்திற்குத் தத்தமக் கென்று வழிபாட்டிடங்களை அமைத்துக் கொண்டுள்ளனர்.

## பலிகள்

பலிகளின் இயல்புகளும், அவற்றின் சமூகச் செயல்பாடுகளும் பலதிறப் பட்டவை. நாட்டார் வழிபாடுகளில் பெரும்பாலும் ஆடு,கோழி, சேவல், பன்றி, எருமை போன்ற உயிர்கள் பலியிடப்படுகின்றன. பார்ப்பனர்களும் ஒரு காலத்தில் உயிர்ப்பலியிட்டனர் என்பதற்கு மணிமேகலை சான்று பகரும்.

இன்னின்ன தெய்வத்திற்கு, இன்னின்ன இத்தகைய உயிர்களை இவ்வாறுதாம் பலியிட வேண்டும் என்ற எழுதா விதிமரபுகளும் உண்டு.

## வினாக்கள்

2 marks